

# பட்டாம்பூச்சி விற்பவன்

நா. முத்துக்குமார்






Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

# தூர்

வேப்பம்பூ மிதக்கும்
எங்கள் வீட்டுக் கிணற்றில்
தூர் வாரும் உற்சவம்
வருடத்திற்கொரு முறை
விசேஷமாய் நடக்கும்.

ஆழ்நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்.

கொட்டாங்குச்சி, கோலி,
கரண்டி,
கட்டையோடு உள்விழுந்த
துருப்பிடித்த ராட்டினம்,
வேலைக்காரி திருடியதாய்
சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்,
சேற்றிற்குள் கிளறி
எடுப்போம் நிறையவே.

சேறுடா... சேறுடாவென
அம்மா அதட்டுவாள்
என்றாலும்
சந்தோஷம் கலைக்க
யாருக்கு மனம் வரும்?

பகை வென்ற வீரனாய்
தலைநீர் சொட்டச் சொட்ட
அப்பா மேல் வருவார்.

இன்றுவரை அம்மா
கதவுகளின் பின்னிருந்துதான்
அப்பாவோடு பேசுகிறாள்.
கடைசிவரை அப்பாவும்
மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க.

-'கணையாழி'
ஆகஸ்ட்'95

# பட்டாம்பூச்சி விற்பவன்

பதின்மூன்று வயதிருக்கும்
பாலத்தின் அருகே
பார்த்தேன் அவனை.

நேற்று பூக்கடை,
போனவாரம் பஜார்வீதி,
என
இடம் மாறுதலே குறிக்கோளாய்
இருக்கிறது அவன் வாழ்வு.

குடையை மல்லாத்தி
அதில் பரப்பியிருந்தான் சரக்கை.

எடுப்பவர் கையில்
வண்ணம் தொலைக்காமலும்
சிறகின் இயல்பை
மறந்த நிலையிலும்
இருந்தன பட்டாம்பூச்சிகள்
அடிவயிற்றில் மெழுகுபூசி.

கூவி
விற்றும் விடுகிறான்
அவ்வப்போது ஒன்றிரண்டை.

சின்னவயதில்
பிடிக்குத் தப்பியதை
இப்போது பிடித்ததாய்
எல்லோருக்கும் கர்வம்.

அலமாரியோ, சுவரோ
இனி
ஆவலோடு வந்து
ஏமாறப் போகின்றன
வீட்டு பல்லிகள்.

—'புதிய பார்வை
நவம்பர், '95



# பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

ஒவ்வொரு முறை
வீடுமாற்றும் போதும்
இழந்து விடுகிறோம் எதையாவது.

பாட்டிக்கு பாக்குவெட்டி.
தம்பிக்கு,
தீப்பெட்டிப் படங்கள்
கிழித்து ஒட்டிவைத்த
கட்டுரை நோட்டு.
அப்பாவுக்கு,
ஆபீஸ் போக வசதியாய்
அருகிலேயே பேருந்து.
எனக்கு,
ஆடுசதை தெரிய கோலம்போடும்
எதிர்வீட்டுப்பெண் மற்றும்
கம்யூனிசம் முதல்
காமசூத்திரம் வரை பேசும்
டீக்கடை நண்பர்கள்.

இம்முறை கவனமாய்
போன வாரம் நட்ட
ரோஜாச்செடி முதல்
மாடியில் காயவைத்த
உள்ளாடை வரை எடுத்தாயிற்று.

என்றாலும்
ஏதோவொன்றை
மறந்த ஞாபகம்.

சோற்றுக்கு வரும் நாயிடம்
யார் போய் சொல்வது
வீடு மாற்றுவதை?

—'புதிய பார்வை'
பிப்ரவரி, '96

# ஒரு கிராமத்து கிரிக்கெட்

தென்னை மட்டையில்
செதுக்கிய 'பேட்'.
சைக்கிள் டியூபில்
செய்த பந்து.

ஆடாதொடை
குச்சிதான் 'ஸ்டெம்பு.'

விதிகள் எதுவும்
யாருக்கும் தெரியாது.

மட்டையில் பட்டால் 'ரன்'
குச்சியில் பட்டால் 'அவுட்.'

பள்ளியில் படிப்பதால்
விசேஷ கவனிப்பெனக்கு.

எல்லாம் தெரிந்ததாய்
எல்லாரும் நினைத்தாலும்
ரொம்ப நாள் வரை
கவாஸ்கருக்கும், கபில்தேவுக்கும்
வித்யாசம் தெரியாது.

சமயத்தில் ஆட்டம்
சுவாரசியமாய் போகையில்
நிறைய பந்துகள்
சிறைப்பட்டிருக்கின்றன
நாயக்கர் தோட்டத்து
நீரில்லா கிணற்றில்.

'செவன் ஸ்டார் டீம்' என்று
வளரத் தொடங்குகையில்
வாழ்க்கை திசைமாற
நகரத்தில் மேற்படிப்பு.



'ஸ்லிப்பு' தெரியலையா
நீயெல்லாம்
பந்து பொறுக்கக்கூட லாயக்கில்லை.'
சகமாணவர்களின்
கேலிகளுக்கிடையில்
இருந்த ஆர்வமும் போயிற்று.

இப்போதெல்லாம்
'கலைப்பது உறுதி - சு.சுவாமி பேட்டி'
'அண்ணியுடன் தொடர்பு
தம்பி படுகொடுலை'
செய்திகள் நடுவே
'கிரிக்கெட் போட்டியில்
இந்தியா வெற்றி'
என படிக்கையில்
புன்னகைப்பதோடு சரி.

-'கணையாழி'
அக்டோபர், '95

# விமானமும் நானும்

விமானத்திற்கும்
எனக்குமுள்ள தொடர்பு
ஒரு சில கணங்களில்தான்
நிகழ்ந்திருக்கிறது.

என் ஊரிலும்
வயலுண்டு என்றாலும்
இறங்கியதில்லை இதுவரை
எந்த விமானமும்.

நினைவு தெரிந்தென்
சின்ன வயதுகளில்
தாழப்பறந்த
ஹெலிகாப்டர்கள் பின்னால்
ஓடியிருக்கிறேன்.

சென்னைக்குச் செல்கையில்
மீனம்பாக்கத்தைக் கடக்கும்
அபூர்வ விநாடிகளில்
விழிவிரிய வியந்து
ரசித்திருக்கிறேன்.

திருவிழாவை முன்னிட்டு
சென்ற வாரம்தான்
விமானத்தில் ஏற
வாய்ப்பு கிட்டியது.
என்றாலும்
கோயில் கோபுர விமானமெல்லாம்
விமானமா என்ன?

-'கணையாழி'
நவம்பர், '95



# இன்றைக்கும்...

இன்றைக்கும்...
கைக்குழந்தையோடு
பேருந்தில் பயணிப்பவளுக்கு
எழுந்து இடம் கொடுக்க
ஆளிருக்கிறது.

இன்றைக்கும்...
பகலில் விளக்கெரியும்
மோட்டார் சைக்கிளுக்கு
சைகை காட்டுகிறார்கள்.

இன்றைக்கும்...
சுருதி சேராமல் பாடும்
பிளாட்ஃபார பிச்சைகளுக்கு
சில்லறைகள் விழுகின்றன.

இன்றைக்கும்...
புழக்கத்திலிருக்கிறது
'ஐயோ பாவம்' என்ற வார்த்தை.

-'புதிய பார்வை'
ஏப்ரல், '97

# தையல்

வயது முற்றிய
கொலுசுக் கால்களின்
உஷ்ண உரசலை;

அதற்கும் மீறிய
அந்தரங்க வலிகளை;

சக ஆணின்
சபலப் பார்வையால்
வேகமாய்ச் சுற்றிய
விரல்களின் கோபத்தை;

சிரிப்புடன் சிதறிய
துணிகளின் துணுக்கை;

என,
பனிகொட்டும் இரவில்
எல்லாம் யோசித்தபடி
விழித்துக் கொண்டிருந்தது
ஏற்றுமதி நிறுவனத்தின்
தையல் இயந்திரம்.



# தொடரும் இயக்கம்

எப்படியாவது நேர்கிறது
விபத்தை எதிர்நோக்க.

இம்முறை
சில காய்கறிகள்,
தேங்கிய ரத்தம்
ஓரமாய் மூளை.

சற்றுத் தள்ளி
மூளைக்குரியவர்.

பார்த்தவர் பேச்சும்
உறவினர் அழுகையுமாய்
தொடரும் இயக்கம்.

என் தலையைத் தடவ
பத்திரமாயிருந்தது.

தற்செயலாய் பார்க்கையில்
அனைவரும்
தடவிக் கொண்டிருந்தனர்
அவரவர் தலையை.

–'திணை'
அக்டோபர், '93




Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

# பள்ளி

தண்டவாளத் துண்டு
காற்றில் ஒலியெழுப்ப
ஆரம்பம் அதன் இயக்கம்.

'நீராரும் கடலுடுத்த'
பாடத் தொடங்குகையில்
டியூசன் எடுத்த களைப்பில்
கொட்டாவிவிடும் வாத்தியார்கள்.

மரபெஞ்சில் பெயர் செதுக்கி
முத்திரை பதிக்கும் மாணவர்கள்.

இன்ஸ்பெக்ஷனுக்காய்
வாங்கிய கட்டுரை நோட்டு
அடுத்த மாதம் எடைக்கு வர
அட்டையுடன் காத்திருக்கும்.

பாடத்தில் இல்லாத
பாலியல் கல்வி
பாத்ருமில்.

யாரும் மெனக்கெடாமலே
வருடந்தோறும் உ ;வாகிறார்கள்
சில அறிவாளிகளும்,
முட்டாள்களும்.

-'ஆனந்த விகடன்'
1-9-96



# தெற்கு மாட வீதி

கோபுரத்துக் கிளிகள்
பஞ்சம் பிழைக்க
பறந்து போய்விட்டன.

இடப்பக்கம் மதில் சுவரின்
நாமக்கோடுகளின் மேல்
ஃபோர் ப்ளஸ் ஃபோர்
போஸ்டர் தரிசனம்.

வடக்கயிறு புண்ணியம் போய்
இயந்திரம் உதவியால்
வலம் வருகிறது
ராட்சத மரத்தேர்.

சோமாவுக்கும் சாமாவுக்கும்
ஸ்டேட்ஸில் வேலை கிடைத்து
வாழ்க்கை வெளிச்சமாக
மூலவர் இன்னமும்
கர்ப்பக்கிரக இருட்டில்.

மார்கழியின் காலைகளில்
தெருவடைத்த புள்ளிகளும்,
கோலமிடும் குமரிகளும்,
காணக் கிடைப்பதில்லை.

இப்போதெல்லாம் கோலத்தை
கொட்டாவி விட்டபடி
இரவில்தான் போடுகிறார்கள்.

சூழல்கள் திசைமாற
தெருமட்டும் இப்போதும்
தெற்கு மாட வீதி.

-'புதிய பார்வை'
ஏப்ரல், '97

## ஆயத்தம்

கார்னாட் தியரத்தை விட்டுவிட்டு
'கலா ஐ லவ் யூ'வென
எழுதுகிறான் வசந்த்.

சுருள் சுருளாய் புகைவிட்டு
மோட்டு வளையம்
வெறிக்கிறான் சுரேஷ்.

டெக் ரிப்பேரில்லை என்றால்
புளு ஃபிலிம் போட்டிருக்கலாமென
புலம்புகிறான் கண்ணன்.

எஃப்.எம்-மில் பாடல்
கேட்டபடி நான்.

ஓரிருவர் பால் சாப்பிட
கொட்டாவியுடன் புறப்பட்டார்கள்.

அடுத்த மாதத் தேர்வுக்கு
படிக்கத்தான் வந்தோம்.

என்றாலும்
எந்த குரூப் ஸ்டடீஸில்
யார் படித்தார்கள்?



## மனுஷிகள்

கள்ளுக்கடையில்
'சாகனா' விற்பவள்
கெட்ட வார்த்தைத் துணையால்
காத்துக் கொள்கிறாள்
கடையையும் கற்பையும்.

பத்து வருடமாய்
மிளகாய்த் தூளுக்கு மத்தியில்
மதுக்குப்பி மறைத்து
பாண்டிச்சேரியிலிருந்து
கடத்தி விற்க முடிகிறது
பேச்சியம்மா கிழவியால்.

வாசனையாகப் பேசி
அய்யர் தெருவிலும்
விற்று விடுகிறாள்
கருவாட்டுக்காரி.

கைக்கும் வாய்க்குமாய்
வாழத்தான் செய்கிறார்கள்
இவர்களும்.

–'வான்நிலா'
செப்டம்பர், '97

# இன்னமும் ...

கால்மாற்றிக் கால் வைத்து
மெல்ல இடம் பெயரும்.

மிரட்டலும் இல்லாமல்
பணிதலும் இல்லாமல்
தன் இருப்பு வெளிக்காட்ட
அவ்வப்போது
ஒரு சிறு எம்புதல்.

கவ்வுதலுக்குத்
தயாரான மென்தொண்டையில்
கூட்டத்தைக் கூப்பிட
குரல்களின் ஆயத்தம்.

பேரப்பிள்ளைகளின்
உறுப்புகளை
அறுத்துப் போடுவதாய்ச் சொன்ன
பாட்டிகளின்
வெற்றிலைக் கறை படிந்த
சொற்களை நம்பி
காத்திருக்கின்றன
அப்பாவிக் காக்கைகள்.

-'ஆனந்த விகடன்
10.8.9



# பதிவுகள்

மலை உச்சிப் பாறையில்,
கல்லூரி மரக்கிளையில்,
தியேட்டர் சேரில்,
புழுதி படிந்த
கார் கண்ணாடியில்,
போன்ற பலவற்றில்
சந்தோசமாய்
எழுதிய என் பெயர்
குறுகிப் போனது
கடன் பத்திரத்தில்.

-'உங்கள் ஜூனியர்'
மார்ச், '95

இதோ அதோ என்று
இழுத்துக் கொண்டிராமல்,

பக்கவாதம் வந்து
படுக்கையில் கழியாமல்,

எல்லோருடனும் பேசிச் சிரித்து
தூங்கிய இரவில்
செத்துப்போனார் தாத்தா.

ஒப்பாரியினூடே
மூக்கை சிந்தி சுவரில் தடவி
பாட்டி சொன்னாள்.
'நல்ல சாவு.'



## அம்மாவின் கரிச் சுவர்

ஒவ்வொரு பொங்கலுக்கும்
வெள்ளையடித்தாலும்
மீண்டும் தன் முகத்தில்
கரி பூசிக்கொள்கிறது
சமையலறைச் சுவர்.

அம்மாவுக்கும் அதுக்கும்
அந்யோன்யம் அதிகம்.

அம்மாவுக்காய் அழுகிற
ஈர விறகுகளின்
புகைச்சோகம் தாங்கி
மேலும் கறுக்கும் அது.

தினசரி பால் கணக்கு
சீட்டு போக 'தள்ளு' என
அம்மா அதன் முகத்தில்
அடிக்கடி வரைந்து
அழகுகள் சேர்ப்பாள்.

அக்காவுக்கு இவற்றிலிருந்து
சீக்கிரம் விடுதலை.

கல்யாணம் ஆனதும்
கேஸ், குக்கர்,
சுவரில் டிஸ்டெம்பர்.

சுவர் விடுதலை மட்டும்
பெண் விடுதலை என்றால்
அம்மாக்களை விட
அக்காக்கள் அதனை
அடைந்து விட்டார்கள்.

# சில கேள்விகள்

முதிர்ந்த மழைநாளில்
தொலைக்காட்சி பார்ப்பவளை
தேநீர் கேட்டதற்காய்
செல்லமாய் கோபிக்கும்
சிணுங்கலை
ரசித்ததுண்டா நீ?

கூடப் படிக்கும்
கிராமத்துத் தோழியிடம்
'என் அண்ணனுக்கு
ரொம்பப் பிடிக்குமென்று'
ஜாமென்ட்ரி பாக்ஸ் நிறைய
நாவல்பழம் வாங்கி வந்து
மண் உதிரா பழத்தை
ஊதித் தரும் அன்பில்
உணர்ச்சி வசப்பட்டதுண்டா நீ?

'என் அண்ணன்'
என்றவள்
சகதோழிகளிடம் அறிமுகப்படுத்துகையில்
வெட்கத்தால் மௌனித்து
தலைகுனிந்திருக்கிறாயா?

தென்னங் கீற்றுக்குள்
சடங்கான வெட்கத்தில்
அவள் கன்னம் சிவக்கையிலே
உனக்கும் அவளுக்கும்
இடையில் தோன்றிய
நுண்ணிய இழைகளை
அறுத்ததுண்டா நீ?



கிளிப்பச்சை என்றவள்
ஆயிரம் முறை கூறியும்
பாசி கலரில் வளையல் வாங்கி வந்து
வசைப்பட்டிருக்கிறாயா?

மிகச் சாதாரணமாய்
கேட்டுவிட்டாய் நண்பா,

"உனக்கென்ன
அக்காவா? தங்கையா?
கஷ்டப்பட்டு சம்பாதித்து
கல்யாணம் பண்ணித் தர,
ஒரே பையன்" என்று.

எனில்,
கஷ்டப்பட்டு சம்பாதித்து
கல்யாணம் பண்ணித்தர மட்டுமா
அக்காவும்? தங்கையும்?

-'தினமணிக்கதிர்'
13.4.97

# மொழி தொலைந்த குரல்

அகாலத்தில் நாய் குரைத்தது.

குழாய் வயிற்றிலிருந்து
எலும்புகளையும்
ரத்தக் கால்வாய்களையும் தாண்டி
காற்றின் முகத்தில்
அறைந்தது குரல்.

திருடனாயிருக்குமென
அரும்பொருள் காக்க
ஆயத்தமானார் அப்பா.

குதிரையில் வந்த
ராஜகுமாரன்
கைப்பிடிக்கும் முன்னரே
கனவு கலைந்ததில்
திடுக்கிட்டாள் அக்கா.

தாம்பத்ய நெருக்கத்தினூடே
குடும்பத்தினர் கண்விழிக்கும்
அவஸ்தையுணர்ந்து
எரிச்சலானான் அண்ணன்.

நேரத்திற்கு முன்னரே வந்து
திண்ணையில் அமர்ந்து
பொடி போட்டுக் காத்திருக்கும்
எமதூதனைக் கண்டுதான்
எக்கிக் குரைக்கிறதோ?
வாழ்வின் கரங்களை
இறுகப் பற்றினார் தாத்தா.



சுயமொழி தொலைத்து
வெவ்வேறு
அர்த்தம் தோன்றும்படி
குரைத்தது நாய்
அதுவும் அகாலத்தில்.

—'புதிய பார்வை'
ஆகஸ்ட் '95

# இட்லிப் புத்திரர்கள்

இட்லிகள் மென்மையானவை.
வெதுவெதுப்பானவை.

சைபர் சைபராய்
வட்டக்குழியில் வெந்தவை.

திடப்பொருளாய் தோன்றி
இளகிய நிலையில் திரவமாகி
வெப்பத்தால் இறுகியது
அதன் உருவம்.

மிக முக்கியம்
இட்லிகள் கொள்கையற்றவை.
சாம்பாரில் மிதவையாகவும்,
சட்னியில் துவையலாகவும்,
ஏதுமற்றப் பொழுதுகளில்
எண்ணெய் மிதக்கிற
மிளகாய்த்தூளில் துணுக்கெனவும்,
எதனுடனும் அமையும்
இட்லிகளின் கூட்டணி.

கம்ப்யூட்டர் 'சிப்ஸ்' விற்கிற
அந்நிய நாடுகளில்
உள்ளூர் இட்லிகளுக்கு

மேலும்
இட்லிகளை
அஃறிணை என்று
அர்த்தப்படுத்த முடியாது
அவை
குட்டிப் போட்டுப் பாலூட்டும்
இனத்தைச் சார்ந்தவை.



# கைக்கிளை

தார் உஷ்ணம்
கால் நுழைய
சூழல் மறைந்து
நடுத்தெருவில் புணரும் நாய்களை
கல்லால் அடித்து கலை.

ஒரு பூ துறந்து
விண்ணிடை புணர்ந்து
பின்னொரு பூ போகும்
வண்ணத்துப் பூச்சிகள் பிரித்து
அதன் சந்தோஷ வர்ணங்களை
விரல்களில் குழை.

ஜோடிக் கிளிகளில்
பெண் கிளியை மட்டும்
விட்டு விடுதலையாக்கி
ஆண் கிளியின்
வெறித்த பார்வைக்கு
தடித்தக் கம்பிகளை
சிநேகமாக்கு.

மழைக்காலத் தவளைகளின்
தாம்பத்யக் கூச்சலுக்கு
பாம்புகளின் கனவை
பரிசாகத் தா.

விவஸ்தையற்று
மனைவி கை இடுப்பைச் சுற்ற
ஸ்கூட்டரில் செல்பவன்
அடுத்த சிக்னலுக்குள்
விபத்தில் சிக்கி
மண்டையைப் போட
மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்.

அக்கம் பக்கம் யாருமில்லை
என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு
இப்போது சொல்
துக்கம் தோய்ந்த சந்தோஷக் குரலில்
'ங்கோத்தா...
நாப்பது வயசாச்சி
எவனும் பொண்ணு தர மாட்டேங்கறான்.'



# பெயர் உருவான கதை

ஆரம்பத்தில் அதன் பெயர்
வேறாக இருந்தது.

அதன் பலகினம்
இருபுறம் சுவர் சூழ்ந்த
குறுபாதை எனலாம்.

சந்தைக்கருகில்
இருப்பதும் காரணம்.

பிடி செருகிய
காதுடை ஆடவர்;
நின்ற வாக்கில்
பழக்கூடைப் பெண்டிர்;

வரைய விழைகிற
ஓவியச் சிறுவர்கள்;
எத்தனையோ முகங்கள்
பரிச்சயம் அதற்கு
முகங்கள் மட்டுமா?

ஈரம் காயா
நீள் மணற்பரப்பில்
வெண்நுரை பூப்பதும்
வழக்கமானது.

ஆத்திரம் மட்டுமே
அடக்கக் கற்ற
மனிதர்கள் கூடி
அதற்கொரு பெயர்
அப்புறம் வைத்தனர்.

'மூத்திரச் சந்து'.




**Click Here to join our Telegram Group**

**For free eBooks, join us on Telegram**

**https://t.me/tamilbooksworld**

நட்சத்திரங்களைப் பற்றி
மூன்று விஷயங்கள்
தெரியும் எனக்கு.

ஒன்று
சூரியன் இல்லாத இரவுக்கு
நட்சத்திரம் தான் ராஜா.

இரண்டு
நட்சத்திரங்களின் தகதகப்பு
போலியானது
உண்மையில் அவை
ஒளி உமிழிகள் மட்டுமல்ல
ஒளி வாங்கிகளும் கூட.

மூன்று
ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும்
சொந்தமாய் உண்டு
அதிகம் அதிகமான
இருண்ட பள்ளங்கள்.

-'புதிய பார்வை'



# செல்கள்

சாத்துக்குடி சுளையின்
உதிர்ந்த பரல் போன்ற
உங்கள் உருவம்
மென்மையானது.

ஒன்றிரண்டாய் உள்நுழைந்து
பல்கிப் பெருகி
வந்தாரை வாழவைக்கும்
உங்கள் தமிழ்ப் பண்பாடு
மேன்மையானது.

எந்தப் பெரிய எழுத்தாளரானாலும்
கடித்துக் குதறும்
உங்கள் விமர்சனப் போக்கு
அபாரமானது

புத்தக அலமாரியின்
'விநோத ரஸ மஞ்சரி' தொடங்கி
'காஃப்கா' வரை
கரைத்துக் குடித்து
இன்னும் இன்னும் எனத் துடிக்கும்
உங்கள் அறிவுப்பசிக்கு
என்னால்தான்
தீனிபோட முடியவில்லை.

உங்களுக்கு என் வந்தனம்.
பொருளாதாரம் கருதி
இத்தனைக் காலம்
என் அம்மா அரித்ததைவிட
உங்களின் அரிப்புதான்
புத்தகம் வாங்குவதை
உடனே நிறுத்தியது.

# என்மனார் புலவர்

"பொண்டாட்டி தாலியை
அடகு வெச்சு
புஸ்தகம் போட்டேன்...
தாயோளி...
விசிட்டிங் கார்டு மாதிரி
ஓசியில் தர வேண்டியிருக்கு."

"சந்தா கட்டுங்க தோழர்
கவிதை அனுப்புனா
உடனே போடுவாங்க."

"குடிச்சா கவிதை கொட்டுதாமே
புல்ஷிட்.
மூணு பீரு
குவாட்டர் ஜானக்ஷா,
வாந்திதான் வந்தது
வாக்கியம் வரலை."

"இவன்
அநியாயத்துக்கு
எளிமையா எழுதறாம்பா."

"அவன் எழுதறது
சுத்தமா புரியலை
ஆயிரம் வருஷம் கழிச்சுதான்
புரியும்னு சொல்றான்."

"முதல் பிரதியை
பெறும் தொழிலதிபர்கள்;
பாம்பே ஆயில் மில்ஸ் தலைவர்

...............

ட்ரிபிள் ஃபோர் கம்ப்யூட்டர்
நிறுவன அதிபர்....
புண்ணாக்கு மற்றும்
புடலங்காய் வியாபாரி
உயர்திரு..."



# பூ நுகரும் காலம்

அவனுக்கு
பூக்கள் என்றால்
பிரியம் அதிகம்.

செம்மண் பரப்புகளில்
உண்டு வளர்ந்த
ரசாயனம் துறந்து
கூர் நாசியில்
அவை தரும் மென்வாசம்
சொல்லில் அடங்காது.

நாணல்களில்
உயர்ந்து அடங்கி
நீர் ஓவியம் வரைகிற
வெண்பனிப் பொழுது
அவன்
பூ நுகரும் காலம்.

ஒவ்வொரு நுகர்வுக்கும்
ஒவ்வொரு வாசம் தர
பூக்களால் மட்டுமே முடியும்.

பூக்களுக்கும்
அவனை ரொம்பப் பிடிக்கும்.
விரல்களால் உயிர் பறித்து
அவன் நுகர்வதற்கு
முந்தைய கணம்வரை.

–'வான்நிலா'
நவம்பர் '97

# வெட்கத்தை நிரப்பி ஒரு கடிதம்

ஆருயிர் ஆனந்த்,
வருத்தமும்
வருத்த நிமித்தமுமாய் இக்கடிதம்.

உன் தங்கை திருமணத்தில்
அந்தச் சம்பவம்
நடக்காமல் இருந்திருக்கலாம்.

பொதுவாகத் திருமணங்கள்
அதுவும்
வெளியூரில் எனில்
நண்பர்கள் நிலைமை
தண்ணீர் தெளித்த மாடு.

சாவகாசமாய் புரட்டுகையில்
வரிக்கட்டங்களில்
மனிதர்கள் சிறைப்பட்ட
என்பது பக்க மொய் நோட்டில்
எங்கள் பெயர் இல்லாதது
உன்னை மேலும் வருத்தியிருக்கும்.

வீட்டில் பணம் வாங்கியிருக்கும்
எங்கள் மனத் தெளிவில்
கல்லெறிந்தது சுரேஷ்.
'நாம வேலையா செய்றோம்
ஸ்டுடண்ட்ஸ் தானே.'

ஆகையால் தண்ணியடித்தோம்
ஆம்லெட் உபயம்
எனது மொய்ப்பணம்.

நீயே சொல்
பாசி தேங்கிய நீரில்
கலந்து குடித்த



மெக்டெவல் பிராந்தியும்
மிளகாய்த்தூள் மிதக்கிற
கத்தரிக்காய் சாம்பாரும்
என்றாவது ஒத்துப்போகுமா?

கல்யாண பந்தியில்
குமட்டிய வாந்திக்கு
காரணம் இதுதான்,

நண்பா...
உனக்கு நாங்கள்
எந்த விதத்திலும் உதவவில்லை.

வாசலில் நின்று
பன்னீர் தெளித்திருக்கலாம்.

வியர்வையுடன்
அன்பும் வழிய
பந்தி பரிமாறியிருக்கலாம்.

குறைந்த பட்சம்
சீட்டாட்டம் தவிர்த்து
தாம்பூலப் பையில்
தேங்காயாவது நிரப்பியிருக்கலாம்.

எல்லாவற்றிற்கும் மேல்
கேசவன் கேலி செய்தது
உனது அத்தைப் பெண்ணாமே?

மன்னிப்புக்கு இல்லை இக்கடிதம்.
மன்னிக்க மாட்டாய் தெரியும்.
வீடுதேடி வந்து உதைத்து விட்டுப்போ.

# சுண்டுவிரல் தாத்தாக்கள்

சோலட்சுமி டாக்கீஸில்
இரவுக்காட்சி முடிந்து
'மருதமலை மாமணியே'
பாடல் துவங்கும்.

நீரில்லா ஆற்றில்
வாத்துக்கள் விட்டுச் சென்ற
நட்சத்திரக் கால் பதிவை
அழிக்காமல் பின் தொடர்வோம்.

முக்கூட்டு முனையில்
என்னை வழியனுப்பி
எல்லோரும் பிரிவார்கள்.

தூரத்து ஆலமரம்
வயிற்றில் புளிகரைக்க,
வீட்டை அடைந்து
மூச்சை விடுகையில்
'பேய் உலாவுற நேரத்துல
என்னடா சினிமா' வென
அப்பா அதட்டுவார்.

தாத்தா அருகணைத்து
சுருட்டு நெடியினூடே,
வாலிபத்தில் அவர் அறுத்த
மோகினிப் பேய்களின்
சுண்டு விரல்களையும்
பின்பவை அழுத கதையையும்
ஆர்வமாய்ச் சொல்ல
டவுசர் நனைத்து
தூங்கிப் போவேன்.

மறுநாள் பள்ளியில்
தாத்தாவின் பெருமையை



நண்பர்களிடம் கூற
அவர்கள் தாத்தாக்களிடமும்
சுண்டுவிரல் இழந்து
கதறிய பேய்களின்
சாகசம் இருப்பது
தெரிய வரும்.

எந்தத் தாத்தாவும்
பேரன்கள் எதிரில்
சுண்டுவிரல் அறுத்ததில்லை.
எந்தப் பேரனும்
சாட்சியும் கேட்டதில்லை.

# டென்த் ஏ காயத்ரிக்கு...

நீ குடியிருந்த வீடு...
கைமாறி கைமாறி
கக்கடைசியில்
காயலான் கடையாகி
ஒட்டடை படிந்தது.
நீ தட்டச்சிய பயிலகம்...
ஒரு மழைக்கால இரவில்
மகள் ஓடிப்போன துக்கத்தில்
asdfgf க்கு மத்தியில்
உரிமையாளர் தூக்கில் தொங்க
நொடிந்தது.
நீ தரிசனம் தந்த கோயில்...
வௌவால் சந்ததி பெருகி
புராதன வாசத்தில்.
உன்னைக் காதலித்த
எங்கள் கவிதைகள்
பரணேறிய டைரித் தாளில்
கன்னி கழியாமல்.
தெரியும்,
மிலிட்டரிக்காரனுக்கு மணமாகி
நீ டெல்லியில் இருப்பது.
சப்தர்ஜங்கோ சர்தாஜி பேட்டையோ
சப்பாத்தியும், சால்னாவுமாய்
தேய்ந்து, துரும்பாகி
தூர்ந்திருக்கும் உன் வாழ்வு.
பேருந்தில்,
டீக்கடையில் என
பொருள்வாயிற் பிரிந்த
நண்பர்களின்
தற்செயல் சந்திப்புகளில்
கேட்கப்படும் முதல் கேள்வி:
'காயத்ரி எங்க இருக்கா மாப்ளே?'
என் பதில்:
'பத்து வருடத்திற்கு முந்தைய
டென்த் ஏ கிளாஸ் ரூம்ல.'

–'தமிழ் அரி
19-1-1



# ஒரு காம்ப்ளான் கவிதை

சிங்கள்-2.00 ரூ.
கப்-3.00 ரூ.
பார்சல்-4.50 ரூ.

ஏ! இளைஞனே...!
எழுந்து நில்லுப்பா.
எத்தனைக் காலம்
குந்திக்கினு இருப்பே?
எழுந்து நின்னா
பரங்கிமலை
பாதம் அளவுதான்!

ஓ! இளைஞனே...!
நிமிர்ந்து நில்லுப்பா.
வளைஞ்சிகினு கீறதுக்கு
நாய்வாலா உன் முதுகெலும்பு?

ஆ! இளைஞனே...
ஆயிரம் யானை வெட்டி
தாத்தாவுக்குத் தாத்தா
போருக்குப் போனது
மறந்து போச்சா?

வீரத்திலகமே
விழித்து வா!
விலைமகளை
ஜெயித்து வா!

பின்குறிப்பு:
இக்கவிதை படித்து
உற்சாகம் பெற்றவர்கள்!
வெளிவந்து விட்டது!
கவிடாக்டரின்
'ஊட்டச்சத்துக் கவிதைகள்'
விலை ரூ.15.00
வி.பி.பி. இலவசம்.

# அப்பாவின் உலகம்

அந்துப்பூச்சி
கரையான்
செல்கள் என
அப்பாவின்
கௌரவ தோழர்கள் வந்துப்போகும்
அவ்வுலகம்
புத்தகங்களால் ஆனது.

அலமாரி,
மர ரேக்குகள்,
பரண் என
எல்லாம் நிரம்பி
இடப்பற்றாக்குறையால்
மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறார்கள்,
மூட்டைக்குள் அடைபட்ட
எழுத்தாளர்கள்.

அநேகமாய் அவர்கள்
புழுதிகளைப் பற்றி
புதுநாவல் எழுதலாம்.

தூசியிசம் எனும்
புதுவகை யுக்தியை
அந்நாவல் அறிமுகப்படுத்தி
இனிவரும் இலக்கியக் கூட்டங்களில்
சண்டையைத் தூண்டலாம்.

அப்பாவின் உலகில்
அவரொத்த நண்பர்களுக்கும்
அவ்வப்போது அனுமதி.
அதன் திறப்புச் சாவி
எப்போதும் அப்பாவிடம்.



நேற்று
அப்பாவைக் குறித்து
பயமும், பெருமிதமும்
தோன்றிற்று எனக்கு.

'ஒரு மூட்டை புத்தகம் கிடைத்தால்
என்னையும் விற்றுவிடுவார்.'

உள்ளாடைக் கடைகளில்
அளவு குறித்தான
பணிப்பெண்ணின் கேள்விக்கு
தலை குனிகிற
ஆணின் செயலுக்கு
வெட்கம் என்று பெயர்.

குழந்தைகள்
கை ஆட்டாத
கூட்ஸ் ரயிலில் இருந்து
கொடியசைத்துப் போகிறான்
கடைசிப் பெட்டியில் கார்டு.

-'உங்கள் ஜூனியர்'
நவம்பர் '95



## ஹைக்கூ என்றும் சொல்லலாம்

சுவர்க்கோழி கத்த
டி.வி-யை நிறுத்தினேன்.

-'கணையாழி'
பிப்ரவரி '94

சிறகுகள் உதிர்ந்து
வெளிவரும் பறவை
கூண்டிற்கு விடுதலை.

இறந்து போனதை
அறிந்த பிறகுதான்
இறக்க வேண்டும் நான்.

-'கணையாழி'
பிப்ரவரி '94

பொருட்படுத்தா மனிதர்களை
நாற்றத்தால் அறைந்தது
குடல் சரிந்த நாய்.




**Click Here to join our Telegram Group**

**For free eBooks, join us on Telegram**

**https://t.me/tamilbooksworld**

பிம்பங்களற்ற தனிமையில்
ஒன்றிலொன்று முகம் பார்த்தன
சலூன் கண்ணாடிகள்.

பன்றிகளின்
காய்ந்த கழிவுகளில்
தக்காளிச் செடிகள்.

அடித்து அடித்து
சோர்ந்து போனார்கள்
மார்பு வேகாத பிணத்தை.

-'கணையாழி'
ஏப்ரல் '93

## ஒப்புதல் வாக்குமூலம்

நான் ஏன் நல்லவனில்லை
என்பதற்கான
மூன்று குறிப்புகள்.
ஒன்று
நான் கவிதை எழுதுகிறேன்;
இரண்டு
அதைக் கிழிக்காமலிருக்கிறேன்.
மூன்று
உங்களிடம் படிக்கக் கொடுக்கிறேன்.